செ. கு. எண்: 089 நாள் :17.06.2016

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 17.6.2016

சென்னை மாவட்டம், தண்டையார்பேட்டையைச் சேர்ந்த திருமதி தாட்சாயிணி அவர்கள் சவுதி அரேபியாவில் பணிக்குச்சென்று, அங்கு பணிபுரிந்த இடத்தில் ஏற்பட்ட கொடுமையிலிருந்து தப்பிப்பதற்காக, வீட்டு பால்கனியிலிருந்து குதித்ததில், முதுகு தண்டுவடத்தில் பலத்த காயமடைந்து சவுதி அரேபியாவிலுள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் அங்குள்ள தன்னார்வத் தொண்டு நிறுவனத்தால் 16.6.2016 அன்று சென்னைக்கு அனுப்பப்பட்டு, அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

திருமதி தாட்சாயிணி அவர்கள் முதுகு தண்டுவடத்தில் பலத்த காயமடைந்ததை கேள்விப்பட்டு நான் மிகவும் வருத்தமடைந்தேன். அவரது குடும்ப சூழ்நிலை, உடல்நிலை மற்றும் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 10 லட்சத்தை வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன். இந்த 10 லட்சம் ரூபாய் திருமதி தாட்சாயிணி பெயரில் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்பு நிதியாக வைக்கப்படும். இந்த வைப்பு நிதியிலிருந்து வட்டியாக மாதந்தோறும் 8,125 ரூபாய் திருமதி தாட்சாயிணி அவர்களுக்கு கிடைக்கப்பெறும்.

திருமதி தாட்சாயிணி அவர்களுக்கு உயர்தர சிறப்பு சிகிச்சை அளிக்க நான் உத்தரவிட்டுள்ளேன். மேலும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அமைச்சர் டாக்டர் வெ. சரோஜா மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர் நீலோபர் கபீல் ஆகியோரை நேரில் சென்று திருமதி தாட்சாயிணிக்கு தேவையான உதவிகளைச் செய்து ஆறுதல் கூறவும் நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**